| | | | |
|---|---|---|---|
| மின்சாரப்பிரிவு<br>அண்ணா<br>தொழிற்சங்கம். | மின்வாரிய ஜனதா<br>தொழிற்சங்கம் | ஐ.என்.டி.யு.சி<br>[சேவியர்] | ஐ.என்.டி.யு.சி<br>[சொர்ணராஜ்] |
| மின்வாரிய<br>பொறியாளர் சங்கம் | மின்ஊழியர்<br>காங்கிரஸ்[NLO] | மின்வாரியதொழிலாளர்<br>பொறியாளர் ஐக்கிய<br>சங்கம்.[HMS] | மின்வாரிய<br>பொறியாளர் கழகம் |
| மின்வாரிய கணக்கு<br>அலுவலர் சங்கம் | பாரதீய மின்ஊழியர்<br>சம்மேளனம்<br>[பி.எம்.எஸ்] | அட்டைப்பட்டியல்<br>பணியாளர் சங்கம் | டாக்டர் அம்பேத்கார்<br>எம்ப்ளாயீஸ் யூனியன் |
| மின்வாரிய<br>பொறியாளர் யூனியன் | மின்வாரிய எம்ப்ளாயீஸ்<br>பெடரேசன் | | |

பாதிக்கப்பட்டவர்களுக்கும், கோரன்டைனில் இருந்தவர்களுக்கும், பணிக்கு வரமுடியாதவர்களுக்கும் சிறப்பு விடுப்பு அளிக்காமல், அரசு உத்திரவிற்கு [அரசு ஆணை : 304 நாள் 17.08.20] மாறாக சொந்த விடுப்பு வழங்கிட அறிவுறுத்திஉள்ளார். மேலும் மக்கள் தொடர்பு காரணமாக கொரோனா தொற்று ஏற்பட்டு உயிர்பலியானவர்களின் குடும்பங்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் ரூ.25 லட்சம் நிதிஉதவி இதுவரை வழங்கப்படவில்லை.

அதேபோல சரண்டர் விடுப்பு பணமாக்கும் விஷயத்தில் ஒப்புதல் அளிப்பதில் முரண்பாடுகள் இருப்பதை சுட்டிக்காட்டி கடிதம் கொடுத்தும் எவ்வித பேச்சுவார்த்தையும் இல்லாமல் மின்ஊழியர்களுக்கு எதிரான உத்திரவை பிறப்பித்துள்ளார்.

முத்தரப்பு ஒப்பந்தப்படி துணைமின் நிலையங்களுக்கான பதவி ஒப்புதல் கேட்டு வரும் கடிதங்களை முடக்கம் செய்துவிட்டு அவுட் சோர்சிங் கொடுத்து வருகிறார்.

இதுபோன்ற பல்வேறு விசயங்களை தொழிற்சங்க பிரதிநிதிகள் என்ற முறையில் வாரியத்தலைவரை நேரில் சந்தித்துப்பேசி சுமுகத்தீர்வு எட்டிட முடியாத நிலை தொடர்வதால் மின் ஊழியர்கள் மத்தியில் கொந்தளிப்பான சூழல் நிலவி வருகிறது.

எனவே, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய நியாயமான கோரிக்கையை ஏற்று மின்வாரியத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை சந்திக்க நேரம் ஒதுக்கீடு செய்திட வழிவகை செய்திடுமாறும், மேற்குறிப்பிட்ட விஷயங்களில் தாங்கள் தலையீடு செய்து தீர்வுகாணவும், தொழில் உறவை மேம்படுத்திட தகுந்த நடவடிக்கை எடுத்திடுமாறும் கேட்டுக்கொள்கிறோம்

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

| | | | |
|---|---|---|---|
| மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம் | கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம் | மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம் | மின்ஊழியர் மத்திய அமைப்பு(சி.ஐ.டி.யு) |

கடுமையாக உழைத்து மிகக் குறுகிய காலத்தில் பொதுமக்களுக்கு மின்விநியோகத்தை சீரமைத்து அரசுக்கு நற்பெயர் கிடைத்திட அரும்பாடுபட்டவர்கள் என்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள்.

இன்றுவரை வேலைப்பளு ஒப்பந்தப்படி அனுமதிக்கப்பட்ட பதவிகளில் சுமார் 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலியிடங்கள் இருந்தும், மின்ஊழியர்களுக்கு வேலைப்பளு மிகுதியால் மன உளைச்சல் ஏற்பட்டாலும், பொதுமக்கள் நலன்கருதி தினந்தோறும் போராடி வருகிறோம் என்பதையும் தாங்கள் நன்கு அறிவீர்கள். இத்தகைய நெருக்கடியான நிலையில் இருந்து மீண்டுவர காலியிடங்களை நிரப்பிட எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆனால் இன்றைய மின்வாரியத்தலைவர் அவர்கள் மின்ஊழியர்களின் மனவலியை போக்கிட நடவடிக்கை எடுத்திடாமல், பணிஓய்வுகாலம் நீட்டிக்கப்பட்ட காரணத்தினால் பதவிஉயர்வுக்கு வழியற்ற நேரத்தில், மூன்று ஆண்டுகளுக்கு மேல் காலியாக இருக்கும் பதவிகளையும், பதவிஉயர்வுக்கு வாய்ப்புள்ள உயர் பதவிகளை ரத்து செய்தும் [குறிப்பாக வாரிய செயலகப் பிரிவில் 66 பதவிகளை ரத்து செய்யப்பட்டுள்ளது], மின்வாரியம் உருவாக்கப்பட்ட நேரத்தில் அமல்படுத்திய நிர்வாக கட்டமைப்பை மாற்றி பல்வேறு குளறுபடிகளை உருவாக்கி, [செயலகப்பிரிவு, தலைமையகப் நிர்வாகப்பிரிவு, வட்ட நிர்வாகப்பிரிவு அலுவலர்களை இடைமாற்றம் செய்திட உத்திரவிட்டுள்ளது] மின்ஊழியர்கள் மத்தியில் தேவையற்ற பதட்டத்தை உருவாக்கி வருகிறார். மேலும் துவக்கநிலை பணியாளர்களுக்கான பதவி உயர்வுக்கான அனுபவ காலத்தை தொழிற்சங்கங்களிடம் கருத்து கேட்காமலேயே தன்னிச்சையாக மாற்றி அமைத்தது. ஆய்வுக்காக பல்வேறு பகுதிகளுக்கு செல்லும் போது களநிலைமையை கேட்டறியாமல் தடாலடியாக தற்காலிக பணிநீக்கம் செய்திட அறிவுறுத்தி ஊழியர்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தி வருகிறார்.

கோவிட் –19 தொற்று நோய் பரவலை தடுத்திட மாநில அரசே பல்வேறு கட்டுப்பாடுகளையும், பொதுப்போக்குவரத்து முடக்கத்தையும் செய்த நேரத்தில் தமிழக அரசு பிறப்பித்த உத்திரவின் அடிப்படையில் மின்வாரியம் அவசரப்பணிகளை மேற்கொள்ள ஆட்கள் பணிக்கு வந்தால் போதும் என்று கூறிவிட்டு, இன்று நோயால்

## தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழு

நாள் : 14.09.2020

பெறுநர் : மாண்புமிகு மின்துறை,மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள்,
தமிழ்நாடு அரசு,சென்னை.

ஐயா,

பொருள் :
மின்வாரியத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் தொழிலாளர் பிரச்சனை குறித்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளை சந்திக்க மறுத்துவருவது- மின்ஊழியர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தி- தொழிற்சங்க நல்லுறவு மேம்பட அமைச்சரின் தலையீடு கோருவது மற்றும் கோரிக்கைகளுக்கு தீர்வு காண உரிய நடவடிக்கை வேண்டுவது தொடர்பாக

**மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கனிவான பரிசீலனைக்கு,**

தமிழ்நாடு மின்வாரியத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக திரு.பங்கஜ்குமார் பன்சால் ஐ.ஏ.எஸ் அவர்கள் பொறுப்பேற்றதில் இருந்து தொழிலாளர் பிரச்சனைகள் குறித்து தொழிற்சங்கப்பிரதிநிதிகள் சந்தித்துப்பேசிட உரிய நேரத்தை ஒதுக்கிடாமல் அனைத்து மின்ஊழியர்களுக்கும் பாதிப்பை ஏற்டுத்தும் வகையில், விரோதமான முடிவுகளை விதிகளுக்கு புறம்பாக தன்னிச்சையாக எடுத்து நடைமுறைப்படுத்தி வருகிறார். இதனால் ஒட்டுமொத்த மின்ஊழியர்களும் கடும் அதிருப்தியில் இருந்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இயற்கை சீற்றங்களின் போது மின்வாரியத்தில் நிலவி வரும் ஆட்கள் பற்றாக்குறையையும் பொருட்படுத்தாது, இரவு பகல் பாராமல்